விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 035 வள்ளுவர் ஆண்டு 2054 தை .09 திங்கட்கிழமை (23.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## ஜி7 நாடுகள் ராஜபக்ஷ சகோதரர்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்



### கனேடிய வெளியுறவுத்துறை அமைச்சர்

(ஒட்டாவா)

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இரண்டு இராணுவ அதிகாரிகள் மீது தாம் விதித்ததை போன்று ஜி7 நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதிக்க ஆதரவு தரும் வகையில் கனடா செயற்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த கனேடிய வெளியுறவுத்துறை அமைச்சர் மெலனி ஜொலி, இந்தத் தடையை ஜி7 நாடுகளும் பின்பற்றவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் "கனடா எப்போதும் மனித 11

## உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகின்றன.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நடத்துவது தொடர்பான அனைத்து அடிப்படை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் 11

### வாழ்த்துகின்றோம்



இன்று ஆரம்பமாகின்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றுகின்ற அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

வலம்புரி கல்விப் பிரிவு

## 13ஆவது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை

### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

- தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்க அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.
- தமிழ்த்தலைவர்களுடனான பேச்சுவார்த்தை முன்னேற்றகரமாக இடம்பெறுகின்றது.



ஊடகம் ஒன்றின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 11

## மின் கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் மீண்டும் வரிசை யுகம் உருவாகும்

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர



(கொழும்பு)

மின்சார கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்லும் அபாயம் உள்ளதாக மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 11

## சட்டவிதிமுறைகளுக்கு முரணாக ஆனல்ட் முதல்வராகத் தெரிவு

### மணிவண்ணன் தரப்பு இன்று வழக்குத் தாக்கல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வராக இம்மானுவல் ஆனல்ட்டை அறிவித்தமை சட்டவிதிமுறைகளுக்கு முரணானது எனத் தெரிவித்து, யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் தரப்பால் இன்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

ஏலவேமுதல்வராக இருந்து பாதீட்டின் தோல்வி காரணமாகப் பதவியிழந்த ஒருவர் மீண்டும் முதல்வராக வரமுடியாது என்ற 11

### தேர்தலில் அரசு தலையிடவில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானங்களை எடுக்கும்

### அமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது, பிற்போடுவது தொடர்பான தீர்மானத்தை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்க வேண்டும் என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு 11

## சம்பந்தன் தலைவரில்லை

### ரெலோ தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு இரா.சம்பந்தன் தற்போது தலைவரில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு கட்சி வெளியேறியதுடன், சம்பந்தனின் பதவி வறிதாகிவிட்டது.

விரைவில் தமிழ்த் 11

### 250 போதை மாத்திரைகளுடன்

## ஏழாலையில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குப்பட்ட ஏழாலை பகுதியில் 250 போதை மாத்திரைகளுடன் (25 காட்) சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவின 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கராணி தியாகராஜா



பிறப்பு 07 • 06 • 1955

இறப்பு 22 • 01 • 2023

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி, 5ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராணி தியாகராஜா அவர்கள் 22.01.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - நாகமுத்து தம்பதியினரின் பாசமிகு மருமகளும், பெயின்டர் தியாகராஜா வின் அன்பு மனைவியும், ஜெயமாலினி (லண்டன்), ஜெயந்தன், ஜெயதர்மினி (நல்லூர் அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுஜாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பஞ்சாட்சரம் (லண்டன்), சந்திரநிபா (ஆசிரியை), ஸ்ரீநியாகரன், பத்மரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜோகானா (லண்டன்), எமா (லண்டன்), ரிஷாங்கன், ஸஷ்விகா, கிருஷயன், கிருஷிகா, பிரவீன், கிருத்திகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.01.2023 இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 33/3, 5 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (14374)

தகவல் : குடும்பத்தினர்
077 714 9957 / 077 647 6210

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் வினாயகமூர்த்தி
(ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி)



அன்னை மடியில் 13.10.1943 | ஆண்டவன் நிழலில் 21.01.2023

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு, இணுவில் மேற்கு, மாங்குளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வந்தவரும் குட்செட் வீதி, தோணிக்கல் வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட இலங்கை பொலிஸ் திணைக் களத்தின் ஓய்வுபெற்ற பொலிஸ் அதி காரி வைத்திலிங்கம் வினாயகமூர்த்தி அவர்கள் 21.01.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - கனகம்மாவின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான வேலாயுதபிள்ளை - நல்லம்மாவின் மருமகனும், அரியநாயகத்தின் அன்புக் கணவரும், மாலதி (பிரான்ஸ்), மைதிலி (வ/விபுலானந்தா கல்லூரி ஆசிரியை), மாலினி (லண்டன்), சஜிந்தன் (எஸ்.எஸ் இணுவில் கந்தன் பயணிகள் சேவை நிறுவனத்தின் உரிமையாளரும், யாழ் தூரசேவைப் பேருந்து உரிமையாளரும் பேருந்து கம்பனியின் தலைவரும்), பாவினி (வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தவறஞ்சன் மற்றும் ரமேஸ்குமார் (நில அளவையாளர்), சகுந்தலா ஆகியோரின் மாமனாரும், விக்னா, சுபதினி, திலக்சனா, தர்சனா, செந்தாழன், அஹாஸ்ஜி, அம்ஷா, பானுஜா, டினுசியன், மேனுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் சகோதரரும், முருகையா, செல்வேந்திரன், காலஞ்சென்ற சுபாஸ்சந்திரன் மற்றும் செல்வராணி, கருணாநிதி, வரதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.01.2023 திங்கட்கிழமை இல.130/8-4 குட்செட்வீதி, முதலாம் ஒழுங்கை, தோணிக்கல் எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தோணிக்கல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். (14376)

இல.130/8–4, குட்செட் வீதி,
1ஆம் ஒழுங்கை, தோணிக்கல், வவுனியா.

தகவல் : குடும்பத்தினர் (024 222 4149)
மகன் :– V.V.சஜிந்தன் (077 020 4353)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## செல்வி குணரட்ணம் கணபதிப்பிள்ளை



அன்பே உருவாகி - எம் மீது கொண்ட
அன்புக்கே உரமாகிய எங்கள்
அன்பு அன்றி தனக்காக வாழாது
எம் அனைவரின் நலனிலும்
தாயைப் போல் அக்கறையுடன்
கண்ணின் இமையாக வளர்த்த - எம்
பாசத்து பைங்கிளி எம் கூட்டிலிருந்து
பறந்து பரமனடி சேர்ந்து ஓராண்டானாலும்
இப் பாரினில் நாம் இருக்கும் வரை
உங்கள் நினைவுகள் எம்
நெஞ்சக் கூடுகளில் வாழும்
உங்களின் ஆன்மா பரமசிவன்
திருவடிகளைச் சரணடைய
அனுதினமும் வேண்டுகின்றோம்



ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
– குடும்பத்தினர் 077 659 5256

தோற்றம் 04.09.1940

மறைவு 03.02.2022

(14368)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு ஆதரவு வெளியிட்டது சீனா

(கொழும்பு)

**சர்வதேச நாணயநிதியத்தின் ஆதரவைப் பெற சீனாவின் உதவியை இலங்கை அரசு கோரியிருந்த நிலையில் சீனா அதற்கு சாதகமான பதிலை வழங்கியுள்ளது.**

(கொழும்பு)

பொருளாதார மீட்சிக்கு இலங்கை அரசு சர்வதேச நாணயநிதியத்தின் உதவியை நாடியிருந்ததுடன், இலங்கை கோரிய கடனுதவியை வழங்குவது தொடர்பில் சில முக்கிய கோரிக்கைகளை சர்வதேச நாணயநிதியம் விடுத்திருந்தது.

அதில் முக்கியமாக அதிகளவான கடன்களை வழங்கியுள்ள நாடுகளுடன் இலங்கை கடன் மறுசீரமைப்புக்களை செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் விதித்த கோரிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு சீனா சாதகமான பதிலை அளித்துள்ளது.

இலங்கைக்கு அதிகளவான கடன்களை வழங்கியுள்ள நாடுகளில் சீனா முன்னணியில் உள்ளதுடன், அதிலும் முக்கியமாக சீனாவின் எக்சிம் வங்கி இலங்கைக்கு அதிக கடனை வழங்கியுள்ளது.

இந்த நிலையில், சர்வதேச நாணயநிதியத்தின் உதவியைப்பெற சீனாவின் உதவியை இலங்கை அரசு கோரியிருந்தது.

இலங்கையின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சீனாவின் எக்சிம் வங்கி நிதியமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் இரண்டு வருடங்களிற்கு இலங்கையின் கடன்களை ஒத்தி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சு வார்த்தைக்கு சீனா தனது ஆதரவையும் வெளியிட்டுள்ளது. (நி)

## உச்சம் தொட்ட கச்சா எண்ணெய் விலை



(வோஷிங்டன்)

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை சமீப காலமாக உயர்ந்து வருகிறது. அதன்படி நேற்று முன்தினம் பிரண்ட் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 87.60 டொலர்களை தாண்டியது.

ஜனவரி 4 முதல் கச்சா எண்ணெய் விலை சிறிய ஏற்ற இறக்கங்களுடன் தொடர்ந்து அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ரயிலுடன் மோதிய முச்சக்கரவண்டி சம்பவ இடத்தில் சாரதி உயிரிழப்பு



(வெலிகம)

வெலிகம - பொல்வத்த பகுதியில் முச்சக்கர வண்டியொன்று ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த மேலும் ஒருவர் படுகாயமடைந்து மாத்தறை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகம - பொல்வத்த புகையிரத கடவையில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் உயிரிழந்த முச்சக்கரவண்டியின் சாரதி 30 வயதுடைய கிரிமதிமுல்ல பகுதியைச் சேர்ந்த விதானகே தம்மிக்க தேசப்பிரிய என்பவரென தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

## மீண்டும் மோசமாகும் காற்றின் தரம் மக்களுக்கு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் குறைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழையுடன் தூசிதுகள்களின் பரவல் அதிகரித்துள்ளமையே இதற்குக்காரணம் என தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தின் காற்று மாசு முகாமைத்துவ பிரிவின் தலைமை ஆய்வாளர் சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், பாதிக்கப் படக்கூடிய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஏனையோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் சில நாட்களில் இந்நிலை படிப்படியாக வழமைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)

## போட்டியிடவுள்ள கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தது தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களை கலந்துரையாடலுக்கு அழைக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை இந்த கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் திகதியை அறிவித்த பிறகு அரசியல் கட்சிகளை தேர்தல் ஆணைக்குழு சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களுக்கு எதிர்வரும் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து இதன்போது அறிவிக்கப்படவுள்ளது. (நி)

## இலங்கை உட்பட சர்வதேச தத்தெடுப்புகள் குறித்து சுயாதீன விசாரணை- நோர்வே முடிவு

(கொழும்பு)

இலங்கை உட்பட சர்வதேச தத்தெடுப்புகள் குறித்து சுயாதீன விசாரணையை ஆரம்பிக்க நோர்வே அரசாங்கம் முடிவு செய்துள்ளது. நோர்வேயின் சிறுவர் மற்றும் குடும்பங்களுக்கான அமைச்சர் கெர்ஸ்டி டோப்பே இதனை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளதாக ஜனவரி மாத நோர்வே செய்தித்தாளான வீஜி தெரிவித்துள்ளது.

இதற்காக அமைக்கப்படவுள்ள விசாரணைக்குழு இலங்கை உட்பட அனைத்து தொடர்புடைய நாடுகளில் இருந்து நிகழ்ந்த தத்தெடுப்புகள் குறித்து ஆராயும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு டச்சு ஆவணப்படம் ஒன்றில் 1980 களில் நாட்டில் பிறந்த ஆயிரக்கணக்கான இலங்கைக் குழந்தைகள் தத்தெடுப்புகள் நிமித்தம் மோசடியாக விற்கப்பட்டதை இலங்கை அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

இரு தரப்பினருக்கும் இடையில் போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு 11,000 குழந்தைகள் வரை ஐரோப்பிய குடும்பங்களுக்கு விற்கப்பட்டிருக்கலாம் என்று அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில், இலங்கையில் இருந்து குழந்தையாக தத்தெடுக்கப்பட்ட நோர்வே நாட்டைச் சேர்ந்த பிரியங்கிகா சமந்தி தலைமையிலான ரொமாண்டிசைஸ்ட் இமிக்ரேஷன் அமைப்பு 2021 ஒக்டோபரில் தத்தெடுப்பு குறித்த விசாரணையை கோரியிருந்தது.

இந்த சுயாதீன விசாரணைக் குழுவிற்குத் தேவையான நிபுணத்துவம் இருக்க வேண்டும் என அமைப்பின் பொது முகாமையாளர் சமந்தி வலியுறுத்தியிருந்தார். சர்வதேச தத்தெடுப்புகளில் தத்தெடுப்பவர்களின் ஆவணங்களைப் பாதுகாப்பதே அவரது அமைப்பின் முக்கிய பணியாகும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். (நி)

## மாணவர்களின் கல்விச் சுற்றுலா; தூரத்தை மட்டுப்படுத்த நடவடிக்கை

### விரைவில் சுற்றறிக்கை வெளியீடு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலா பயணங்களுக்கு செல்லக்கூடிய தூரத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இதன்படி, ஒரு நாளைக்கு மாணவர்கள் செல்லக்கூடிய அதிகபட்ச தூரம் 100 கிலோமீற்றராக மட்டுப்படுத்தப்பட உள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படும் மாணவர்களை மாலை 6 மணிக்கு முன் அந்தந்த பாடசாலைகளுக்கு அழைத்து வர வேண்டும். பாடசாலை மாணவர்கள் மேற்கொள்ளும் கல்விப் பயணங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பகுதிகள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

புதிய அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கையை அனைத்து பாடசாலைகளுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

நுவரெலியா நானுஓயா ரதல்ல பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதை அடுத்து புதிய சுற்றுநிருபம் வெளியிடுவது தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். தேர்ஸ்டன் கல்லூரியைச் சேர்ந்த 43 மாணவர்கள் உட்பட 53 பேர் காயமடைந்து நுவரெலியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸி, எம்பாப்பே அதிரடி ஆட்டம்
## பரிஸ் செயின்ற் ஜேர்மைன் வெற்றி

சவுதி அரேபியாவில் நடைபெற்ற பரிஸ் செயின்ற் ஜேர்மைன் அணிக்கும் (பிஎஸ்ஜி), அல் நாசர் - அல் ஹிலால் கழகங்களின் வீரர்கள் இணைந்த றியாத் ஆல் ஸ்டார்ஸ் கூட்டு அணிக்கும் இடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் பிஎஸ்ஜி அணி 5:4 கோல்களால் வென்றது.

றியாத் நகரிலுள்ள மன்னர் பஹத் அரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இப் போட்டி நடைபெற்றது. போர்த்துக்கல் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ சவுதி அரேபியாவின் அல் நாசர் கழகத்தில் இணைந்த பின்னர் அவர் பங்குபற்றிய முதல் போட்டி இதுவாகும்.

இப்போட்டியின் முதல் கோலை பிஎஸ்ஜி வீரர் மெஸி அடித்தார். மீண்டும் 3 ஆவது நிமிடத்தில் அவர் மேலும் ஒரு கோல் அடித்தார். 31ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி, றியாத் அணி வீரர் ரொனால்டோ கோல் அடித்தார். கோல் எண்ணிக்கை 1:1 என சமப்படுத்தப் பட்டது.

43 ஆவது நிமிடத்தில் பிஎஸ்ஜியின் 2 ஆவது கோலை எம்பாப்பே அடித்தார். எனினும் இடைவேளைக்கு முன் உபாதை ஈடு நேரத்தில் ரொனால்டோ மீண்டும் ஒரு கோல் அடித்தார். இடைவேளையின் போது இரு அணிகளும் 2:2 விகிதத்தில் சம



நிலையில் இருந்தன.

55ஆவது நிமிடத்தில் பிஎஸ்ஜி அணியின் 3 ஆவது கோலை சேர்ஜியோ ரமோஸ் அடிக்க இதனால் பிஎஸ்ஜி 3:2 விகிதத்தில் முன்னிலை பெற்றது.

2 நிமிடங்களின் பின் றியாத் அணி வீரர் ஹையூன் சூ ஜாங் கோல் அடிக்க ஆட்டம் சூடுபிடித்தது.

60ஆவது நிமிடத்தில் பிஎஸ்ஜியின்4 ஆவது கோலை கிலியன் எம்பாப்பே அடிக்க சக அணி வீரர் 79ஆவது நிமிடத்தில் பிஎஸ்ஜியின்ஹியுகோ எகிட்டிக்கே அவ்வணியின் 5வது கோலை அடித் தார்.

இறுதியில் இப்போட்டியில் 5:4 கோல்கள் விகிதத் தில் பிஎஸ்ஜி அணி வெற்றியீட்டியது. (6)


# காணி விற்பனைக்கு

**சாவகச்சேரி நகரில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு.**

(நிலப்பரப்பு)

- ஆதிசிவன் முத்துமாரி அம்மன் கோவில் பிரதான வீதியில்.
- 18 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்டுள்ளது.
- தென்மராட்சி கலைமன்றம் 100 மீ தூரம்.
- அரச வங்கி, தனியார் வங்கி 200 மீ தூரம்.
- சாவகச்சேரி சந்தை, பஸ் நிலையம், புகையிரத நிலையம் 300 மீ தூரம்.
- அமைதியான சூழல், நல்ல தண்ணீர்.

பார்வையிடும் நேரம் - காலை 8.00 - மாலை 6.00 மணி

விலை பேசித் தீர்மானிக்கப்படும் (14373)

**077 784 0379 Viber, Whatsapp**

**077 467 2408, 074 001 5380**


# நியூசிலாந்தை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் ராய்ப்பூரில் நடைபெற்றது. போட்டியில் முதலில் ஆடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்திலேயே தடுமாறியது.

இந்திய வேகப்பந்து வீச்சில் அடுத்தடுத்து வீரர்கள் தங்களது விக்கெட்டுகளை இழந்து பெவிலியன் திரும்பினர்.

அந்த அணி ஒரு கட்டத் தில் 15 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்தது. நியூசிலாந்து அணி 34.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 108



ஓட்டங்களை மட்டுமே எடுத் தது.

இதையடுத்து 109 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்ப வீரர் ரோகித் சர்மா 51 ஷுப்மன் கில், விராட்கோலி இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர்.

இவ் வெற்றியின் மூலம் நியூசிலாந்துடனான தொடரை வென்று அசத்தியது இந்திய அணி. (க)


**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்த பொதுக்கூட்டமும்**
**புதிய நிர்வாகத் தெரிவும் - 2023**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


தலைவர்,
பழைய மாணவர் சங்கம்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி (C-5833)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2751

அபிராமி




அஜந்தா




நிதேஷ்




கைலாஷ்




கபிலா




யுவதேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநல சிகிச்சைகளுக்காக வருபவர்கள் எண்ணிக்கை

## 30 வீதத்தால் அதிகரிப்பு - மனநல மருத்துவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**பொருளாதார பிரச்சினைகள் காரணமாக ஏற்பட்டுள்ள அழுத்தங்களுடன் மன நோயாளிகளாக மாறியுள்ள நபர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக் கப்படுவது மற்றும் சிகிச்சைகளுக்கு வருவது சுமார் 30 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக காலி கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் சிறப்பு மனநல மருத்துவர் ரூமி ரூபென் தெரிவித்துள்ளார்.**

மனநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த நபர்கள், பொருளா தார பிரச்சினைகள் காரணமாக மருந்து உட்கொள்வதை நிறு த்தி உள்ளதால் அவர்களின் மனநோய் மீண்டும் அதிகரித்து மருத்துவமனைகளில் அனு மதிக்கப்படுவது அதிகரித்துள் ளதைக் காண முடிகிறது.

வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாத அழுத்தங்கள் மற்றும் விரக்திக்கு உள்ளாகி இலங் கையில் இருக்கும் தமக்கு எதிர் காலம் இல்லை என எண்ணும் இளைஞர், யுவதிகளுக்கு மத்தி யில் மனநல பிரச்சினை கள் பெரும்பாலும் அதிகரித்துள் ளன.

இதனால் ஏற்பட்டுள்ள மன அழுத்தங்களை சமூகத்தின் மீது காட்டி வருகின்றனர். பலர் தமது கோபத்தை வெளிப்படுத்துவதற் காக சமூக ஊடகங்களை பயன் படுத்தி வருகின்றனர்.

மேலும் பொருளாதார பிரச்சி னைகள் உட்பட பல்வேறு சிக் கல்கள் காரணமாக வயது வந்த வர்கள் மாத்திரமல்லாது, மாண வர்களின் மன அழுத்தங்களும் அதிகரித்துள்ளன.

பல்வேறு காரணங்களினால் தமது கற்றல் நடவடிக்கைகளை உரிய காலத்தில் செய்து கொள்ள முடியாத நிலையில் மாணவர் கள் மன அழுத்தங்களுக்கு உள் ளாகி இருக்கின்றனர்.

கொரோனா காலத்தில் இணைய வழி கற்பித்தல் காரணமாக அலைபேசிகளுக்கு அடிமையாகிப் போன மாணவர் களில் பெரும்பாலானோர் மன நோய்களுக்கு உள்ளாகி கஷ்டப் பட்டு வருவதாகவும் மருத்துவர் ரூமி ரூபென் மேலும் தெரிவித் தார். (நி)

## நிறுவனங்களை மறுசீரமைக்க திட்டம் வகுக்கும் அரசாங்கம்



(கொழும்பு)

பல அரச நிறுவனங்களை ஒன்றாக இணைக்கவும், சில நிறுவனங்களை தனியார் மய மாக்கவும் திட்டங்கள் வகுக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அந்த வகையில், இயந்திர நிறுவனங்கள் மற்றும் பொறியி யல் கூட்டுத்தாபனம் போன்ற வற்றை ஒன்றிணைக்க அரசாங் கம் முடிவு செய்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த நிறுவன ங்களில் பணியாற்றும் ஊழியர்க ளுக்கு நெருக்கடி நிலை ஏற்ப டும் எனக் கூறப்பட்டுள்ளது.

நிறுவன மறுசீரமைப்புக்காக குறித்த நிறுவனங்களின் அத்தி யாவசிய ஊழியர்களை மாத்தி ரம் தொடர்ந்து வைத்திருக்கவும், ஏனைய ஊழியர்களை பணி நீக்கம் செய்யவும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பணி நீக்கம் செய்யப்படும் ஊழியர்களுக்கு அரச நிறுவன ங்களுக்குச் சொந்தமான சொத் துக்களை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகையை நட்ட ஈடாக வழங்க அரசாங்கம் தீர்மா னித்துள்ளதாகக் கூறப்பட்டுள் ளது. (நி)

## தேர்தலைப் பிற்போடும் யோசனை இதுவரை இல்லை - ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)



தேர்தல்கள் ஆணைக் குழுவின் தீர்மானத்துக் கமைய உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய திகதியில் நடத்த வேண்டும் என்பது தான் எனது விருப்பம். தேர் தலை ஒத்திவைக்கும் எண் ணம் இதுவரை இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் தார்.

நேற்று முன்தினம் வேட்பு மனுத் தாக்கல் நிறைவடை ந்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பி னர்களுடன் நடத்திய கலந்து ரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது கட்சி சில இடங்களில் தனித்தும், சில இடங்களில் கூட்டணியாக வும் போட்டியிடுவது தொட ர்பில் விமர்சனங்கள் வெளி வருகின்றன.

அந்த விமர்சனங்களுக் கெல்லாம் நாம் பதிலளித்து நேரத்தை வீணாக்கக் கூடாது. தேர்தல் வெற்றி தொடர்பிலேயே நாம் அனை வரும் கவனம் செலுத்த வேண்டும்.

மக்கள் மத்தியில் பிரசா ரங்களை உரிய வகையில் முன்னெடுங்கள். வன்முறை கள் தலைதூக்கும் செயல்க ளுக்கு ஆதரவு வழங்காதீர் கள்.

வன்முறையாளர்களைச் சமூகத்தில் இருந்து நாம் ஒதுக்கிவைக்க வேண்டும். ஜனநாயகவாதிகளுக்கு இந்த நாட்டில் என்றும் மதிப்பு இருக்கும் என அவர் தெரி வித்தார். (நி)

# இராசிபலன்

23.01.2023
தை 09, திங்கட்கிழமை
துதியை முன்னிரவு 10.54 மணிவரை

அவிட்டம் பின்னிரவு 4.48 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
இராகுகாலம் 8.06-9.36 மணிவரை

சந்திராஷ்டமம்
புனர்பூசம்

வளவன்




தொலைதூரத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், ரோக பயமுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தந்தை வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.




எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, தொழிலில் பொறுப்புக்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, பிரயாண பயமுண்டு.




எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் திருப்தியுண்டு, தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், மறைமுகப் போட்டிகள் மாறும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நன்மைகள் நாடி வரும் நாள்.




எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.




தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.




பணப்பற்றாக்குறை ஏற்படலாம், குடும்பப் பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், சயன சுகக் குறைவான நாள்.




ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பயணங்கள் விரும்பிய படியே கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**வீட்டில் விளக்கேற்றாவிட்டால் வேதாளம் குடிகொள்ளும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்குப் பேரவை உறுப்பினர்களாக 9 பேர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்களாக 9 பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களாகப் பதவி வகித்தவர்களின் பதவிக் காலம் கடந்த 15 ஆம் திகதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 16 ஆம் திகதி முதல் அடுத்துவரும் மூன்றாண்டு காலத்துக்கு 9 வெளிவாரி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் பஞ்சநாதன் சுதர்சன், சட்டத்தரணி பத்திநாதர் அன்ரன் புனிதநாயகம், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் தில்லையம்பலவாணர் விமலன், சப்ரகமுவா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் மஹிந்த எஸ் ரூபசிங்க, வாழ்நாள் பேராசிரியர் குமுது விஜேவர்த்தன, ஓய்வுபெற்ற பேராசிரியர் அருட்தந்தை ஞா. பிலேந்திரன், சட்டத்தரணி டி. ரெங்கன், ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதவான் திருமதி ஶ்ரீநிதி நந்தசேகரன் மற்றும் ஏந்திரிரி. சாந்தாதேவி ஆகியோரே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக விதிமுறைகளுக்கமைய 15 வெளிவாரி உறுப்பினர்களைக் கொண்ட யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கு 9 பேர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-33)

# நவமங்கை நிவாசத்தில் அறநெறி வகுப்புகள் ஆரம்பம்

(அராலி)

யாழில் அமைந்துள்ள நவமங்கை நிவாசத்தில் அறநெறி வகுப்பு மற்றும் கலை மன்றம் ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இதில் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். (நி-104)

# போதை மாத்திரையுடன் இளைஞன் மடக்கிப்பிடிப்பு

(அராலி)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நரியிட்டான் பகுதியில் போதை மாத்திரைகளை வைத்திருந்த இளைஞன் ஒருவரை அக்கிராமத்து இளைஞர்கள் மடக்கி பிடித்துள்ளனர்.

குறித்த இளைஞன் 8 போதை மாத்திரைகளை வைத்திருந்தவேளை மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார். மணற்புலம் - அளவெட்டி பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு பிடிக்கப்பட்டு தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-104)



அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வைரவிழாவையொட்டி நடத்தப்பட்ட சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும்-சைவ மாநாடும் நேற்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் இடம்பெற்றன. (படங்கள்- சுபேசன்)

# கெருடாவில் கந்தசுவாமி ஆலயத்தில் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள கந்தசுவாமி ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஆலயத்தில் எழுந்தருளி இருந்த வள்ளி மற்றும் தெய்வானை ஆகியோரின் தாலி,ஆலய பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய் மற்றும் பணம் ஆகியன திருடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-30)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம்-கட்டுடைப் பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார மேம்பாட்டிற்காக தையல் இயந்திரம் வழங்கி வைக்க ப்பட்டது.மலேசியா ரோட்டரிக் கழக அங்கத்தவர்களின் நிதிப் பங்களிப்பில் குறித்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்- சுபேசன்)



யாழ். போதனா மருத்துவமனை உத்தியோகத்தர்கள் நேற்று உடல் ஆரோக்கிய மேம்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வாக துவிச்சக்கர ஓட்டத்தில் ஈடுபட்டனர்.இறுதியில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. (படங்கள்- சிவசாந்தன்)

# ஸ்கந்தபுரத்தில் இலத்திரனியல் நூலகம்

(அக்கராயன்)

கிளிநொச்சியில் ஸ்கந்தபுரம் பகுதியில் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் நூலகத்திற்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

ஸ்கந்தபுரம் நூலகம் இலத்திரனியல் நூலகமாக மாறுவதன் மூலம் அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்பப் பாடசாலை, ஸ்கந்தபுரம் இல.01, இல.02 பாடசாலைகள், கோணாவில் மகா வித்தியாலயம், யுனியன்குளம் பாடசாலை, கண்ணகைபுரம் பாடசாலை, முக்கொம்பன் மகா வித்தியாலயம், வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம், ஆனைவிழுந்தான் பாடசாலை, அமதிபுரம், ஆரோக்கியபுரம் பாடசாலைகள் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் இந்நூலகத்தின் மூலம் கூடுதலான பயனை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-350)

# சிறுவர் பூங்கா கைதடியில் திறப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கைதடிப் பிரதேசத்தில் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக காணப்பட்ட சிறுவர் பூங்கா கடந்த தைப்பொங்கல் தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கைதடி உப பணிமனைப் பொறுப்பதிகாரி ச.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கைதடியைச் சேர்ந்த அமெரிக்காவில் உறுப்பு மாற்று அறுவைச்சிகிச்சை நிபுணராக கடமையாற்றும் மருத்துவர் த.தவச்சேந்தன் கலந்து சிறப்பித்திருந்தார். (நி-30)

# பூநகரி வாடியடி நெற்புலவு வீதி தற்காலிகமாக புனரமைப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி வாடியடி நெற்புலவு வீதி தற்காலிகமாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

பூநகரி பிரதேச சபையின் நிதி மூலமாக குறித்த வீதி கடந்த வெள்ளிக்கிழமை புனரமைக்கப்பட்டுள்ளது.

நெற்புலவு கிராமத்தில் வாழ்கின்ற 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இவ்வீதி புனரமைப்பினால் பயன் பெற்றுள்ளனர். (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர்களுக்கு மேலதிக நேரம் ஒதுக்கீடு

## பரீட்சை ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு மேலதிகமாக மேலும் 10 நிமிட நேரத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



கட்டுரை வினாத்தாளுக்கான 3 மணித்தியால கால அவகாசம் வழங்கப்பட்டதன் பின்னர் மேலதிகமாக 10 நிமிடங்களை மாணவர்களுக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சைகள் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் புகையிரத திணைக்களம் இணைந்து பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக விசேட போக்குவரத்து திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது. (நி)


# பதவி வெற்றிடம்

❖ வெப் இயந்திர இயக்குநர்கள்
பயிலுநர்கள் (இரவுக்கடமை-ஆண்கள்)

யாழ்.நகரிலிருந்து 5 km தூரத்துக்குள்
இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு
**076 097 3121**


## ஏல விற்பனைக்கான கேள்வி அறிவித்தல்
## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் 2021/2022 ஆம் ஆண்டுக்கான பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை செய்தல்.

தலைவர், ஏல விற்பனை சபை 2021/2022 ஆம் ஆண்டு பின்வரும் விதிமுறைகளுக்கு அமைவாக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கேள்விமனு கோரப்படுகின்றது.

1. ஏலவிற்பனை தேசிய போட்டி பெறுகைகள் முறைக்கு (NCB) அமைவாக இடம்பெறும்.
2. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் தை மாதம் 27,28,29 ஆகிய மூன்று தினங்களும் காலை 9.00 மணி முதல் மாலை 1.00 மணி வரை இல.111, பிரதான வீதியில் உள்ள யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் ஏலவிற்பனைக்கான பொருட்களை பார்வையிட முடியும்.
3. பொருட்களை பெற விரும்புபவர்கள் வைத்தியசாலை காசாளரிடம் ரூபா 500.00 இனை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று கேள்விமனு பத்திரத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
4. மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனை வைத்தியசாலை காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்று பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் பிரதியினையும் இணைத்து கேள்விமனு பத்திரத்தினை பூரணப்படுத்தி மூடிய கடித உறையினுள் இட்டு யாழ். போதனா வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் உள்ள பெட்டியினுள் 30.01.2023 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பாக இடுதல் வேண்டும்.
5. அன்றைய தினம் மதியம் 12.00 மணியளவில் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் பரிசீலிக்கப்படும். அதி கூடிய தொகையினை விண்ணப்பித்த கேள்விதாரர் காசாளரிடம் அத்தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்று அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு முன்பாக பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
6. கேள்வி மனு மூலம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அப்பொருட்களை பெறுவதிலிருந்து விலகுவாராயின் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணத்தினை மீளப்பெற முடியாது என்பதோடு எதிர்வரும் காலத்தில் வைத்தியசாலையில் இடம்பெறும் ஏலவிற்பனையிலும் பங்குபெற தகுதியற்றவராக கருதப்படுவார்.
7. மேற்படி ஏலவிற்பனை தொடர்பான இறுதி முடிவினை எடுக்கும் அதிகாரம் ஏலவிற்பனை சபைக்கு உரியதாகும்.
8. மேலதிக விபரங்களை வைத்தியசாலை கணக்காளரின் தொலைபேசி இலக்கம் 021-222 3149, 021-221 2482 இனை அழைத்து பெற்றுக் கொள்ள முடியும்.

**பணிப்பாளர் (தலைவர்),**
**ஏலவிற்பனை சபை,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.** (C-583[illegible])


# பதவி வெற்றிடம்

❖ அலுவலக செய்தியாளர்கள் (இருபாலாரும்)
❖ முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)

உங்கள் சுயவிபரக் கோவையை
**076 636 3378**
என்ற Whats App இலக்கத்துக்கு அனுப்புங்கள்.

அல்லது

**பொதுமுகாமையாளர், வலம்புரிப் பத்திரிகை பணிமனை,**
**இல 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
என்ற முகவரிக்கு தபாலில் அனுப்புங்கள்.

# வேலையாட்கள் உடன் தேவை

சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் அமைந்திருக்கும் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்தி நிலையத்தில் நாள் சம்பளத்திற்கு போத்தல் கள் அடைப்பதற்கும் மற்றும் கிளை நிலையங்களில் கள் விற்பனை செய்வதற்கும் உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட வதிவிடத்தை உடைய 21 வயதிற்கு மேற்பட்ட (ஆண்) வேலையாட்கள் தேவை. எனவே ஆர்வமுடையோர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தொலைபேசியில் அல்லது நேரில் சமுகம் கொடுத்து பதிவுகளை மேற்கொண்டு வேலை செய்ய முடியும்.

**(சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.)**
**விண்ணப்ப முடிவுத் திகதி 28.01.2023.**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
தலைவர்/பொது முகாமையாளர்,
சுன்னாகம் ப.தெ.வ.அ,கூ.சங்கம், மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.
தொ.பே.இல. 021 224 0022, 021 224 0024- தலைமைக் காரியாலயம்
077 020 4378- தலைவர் (C-5830)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1979 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா:30 ½ சூரி 4 செவ் 3 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: A/L Welding Shop<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13291 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா:52 ½ சூரி 1 செவ் 2 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் சொந்தத் தொழில்<br>தொ.இ: G/11776 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: சூரி , செவ் 10 இல்<br>உயரம் :5' 6"<br>தகைமை/தொழில்: Mechanical Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/13292 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 23 ½ சூரி 8 செவ் 1 இல்<br>உயரம்:155 cm<br>தகைமை/தொழில்: HNDM<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/11866 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: சூரி, செவ் 9 இல்<br>உயரம்: 171 cm<br>தகைமை/தொழில்: Dental Surgeon (BDS)<br>எதிர்பார்ப்பு: மருத்துவம் சார்ந்த தொழில்<br>தொ.இ: B/13293 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 27 ½ சூரி , செவ் 10 இல்<br>உயரம்:5' 3"<br>தகைமை/தொழில்: Cima<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/11867 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 1<br>கி.பா: 43 ½ சூரி 6 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: O/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13295 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 47 சூரி 1 செவ் 9 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: HND IT<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/11871 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 83





'எண்கொண்ட தொண்ணூற்றின் மேலுமிரு மூன்று புண்கொண்ட வெற்றிப் புரவலன்' என்றும், 'புண்ணூறு தன்றிருமேனியிற் பூணாகத் தொண்ணூறும் ஆறுஞ் சுமந்தோனும்' என்றெல்லாம் பிற்கால ஆஸ்தானப் புலவர்களால் பாடப் பெற்றவர். இவருடைய மகன் ஆதித்த சோழன் தந்தைக்கு இணையான பெரு வீரனாக விளங்கினான். இவனும் பல போர்களில் கலந்து கொண்டு புகழ் பெற்றான்.

விஜயாலய சோழர் முதுமைப் பிராயத்தை அடைந்து மகனுக்குப் பட்டங்கட்டி விட்டு ஓய்ந்திருந்தார். அச்சமயத்தில் பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் பகைமை முற்றி அடிக்கடி சண்டை நடந்து கொண்டிருந்தது.

அந்தக் காலத்துப் பாண்டிய மன்னனுக்கு வரகுணவர்மன் என்று பெயர்; பல்லவ அரசனுக்கு அபராஜித வர்மன் என்று பெயர். இந்த இரண்டு பேரரசர்களுக்குள் நடந்த சண்டைகள் பெரும்பாலும் சோழ நாட்டில் நடைபெற்றன. யானையும் யானையும் மோதிச் சண்டையிடும்போது நடுவில் அகப்பட்டுக் கொள்ளும் சேவல் கோழியைப் போல் சோழ நாடு அவதிப்பட்டது.

அப்படி நகர்ந்தவர்கள் குடந்தைக்கு அருகில் இருந்த பழையாறை என்னும் நகருக்கு வந்து சேர்ந்தார்கள். ஆயினும் உறையூர் தங்கள் தலைநகரம் என்னும் உரிமையை விட்டு விடவில்லை. 'கோழி வேந்தர்' என்னும் பட்டத்தையும் விட்டு விடவில்லை.

பழையாறைச் சோழ மன்னர்களில் விஜயாலய சோழர் என்பவர் இணையில்லா வீரப்புகழ் பெற்றவர். இவர் பற்பல யுத்த களங்களில் முன்னணியில் நின்று போர் செய்து உடம்பில் தொண்ணூற்றாறு காயங்களை அடைந்தவர்.

சோழ நாட்டு மக்கள் துன்புற்றார்கள். எனினும் இப்போர்களை விஜயாலய சோழர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஒவ்வொரு போரிலும் ஏதாவது ஒரு கட்சியில் தம்முடைய சிறிய படையுடன் போய்க் கலந்து கொண்டார். வெற்றி தோல்விகள் மாறி மாறி வந்தாலும் சோழ நாட்டில் போர்க் குணம் மிகுந்து வந்தது.

காவேரி நதியிலிருந்து பல கிளை நதிகள் பிரிந்து சோழ நாட்டை வளப்படுத்துவதை யாவரும் அறிவார்கள். அக்கிளை நதிகள் யாவும் காவிரிக்குத் தெற்கே பிரிகின்றன. கொள்ளிடத்திலிருந்து பிரிந்து காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவில் பாயும் நதி ஒன்றே ஒன்றுதான்; அதற்கு மண்ணியாறு என்று பெயர்.

இந்த மண்ணியாற்றின் வட கரையில், திருப்புறம்பயம் கிராமத்துக்கு அருகில், பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் இறுதியான பலப் பரீட்சை நடந்தது. இரு தரப்பிலும் படைபலம் ஏறக்குறைய சமமாக இருந்தது. பல்லவ அபராஜிதவர்மனுக்குத் துணையாக கங்க நாட்டு பிரிதிவீபதி வந்திருந்தான். ஆதித்த சோழனும் அபராஜிதவர்மனுடைய கட்சியில் சேர்ந்திருந்தான்.

பாண்டிய சைன்யத்துடனும் பல்லவ சைன்யத்துடனும் ஒப்பிட்டால், சோழ சைன்யம் மிகச் சிறியதாகவே இருந்தது.எனினும், இம்முறை பாண்டியன் வெற்றி பெற்றால், சோழ வம்சம் அடியோடு நாசமாக நேரும் என்று ஆதித்தன் அறிந்திருந்தான். ஆகையால், பெரிய சமுத்திரத்தில் கலக்கும் காவேரி நதியைப் போல் பல்லவரின் மகா சைன்யத்தில் தன்னுடைய சிறு படையையும் சேர்ந்திருந்தான்.

காத தூரத்துக்குக் காத தூரம் ரணகளம் பரவியிருந்தது. ரத, கஜ, துரக, பதாதிகள் என்னும் நால்வகைப் படைகளும் போரில் ஈடுபட்டிருந்தன. மலையோடு மலை முட்டுவது போல் யானைகள் ஒன்றையொன்று தாக்கிய போது நாலா திசைகளும் அதிர்ந்தன.


புயலோடு புயல் மோதுவது போல் குதிரைகள் ஒன்றின் மீது ஒன்று பாய்ந்த போது குதிரை வீரர்களின் கையிலிருந்த வேல்கள் மின்வெட்டுகளைப் போல் பிரகாசித்தன. ரதத்தோடு ரதம் மோதிச் சுக்கு நூறாகித் திசையெல்லாம் பறந்தன.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

### நடுவர் தீர்ப்பு



(நேற்றைய தொடர்ச்சி)

தேய்த்துத் தேய்த்து அவன் மூக்கே தேய்ந்து விடும் போலிருந்தது. எரிச்சலோ எரிச்சல்... தாங்க முடியாத எரிச்சல்! "போதும் போதும்! என்னை விட்டு விடுங்கள்" என்று துடியாய்த் துடித்துக் கூவினான் விடுதிக்காரன்.

தனக்கு நேர்ந்த அனுபவத்தைக் கூறி, இதே மாதிரி தீர்ப்புத்தான் இந்த வழக்கிலும் கிடைக்கும் என்று அந்த ஊர்க்காரன் உரைத்தான்.

"உண்மையிலே அன்றைக்கு அந்தப் பண்டிதர் வழங்கியது மிகமிக நியாயமான தீர்ப்பு தானே! அது போலவே இப்போது உங்கள் வழக்கில் நான் கூறப் போவதும் பொருத்தமான நியாயமான பாரபட்சமில்லாத நல்ல தீர்ப்பு தான்.

அதாவது மாட்டின் மேல் ஏறி வந்ததற்கு வாடகை ஏற்கனவே பேசியபடி மூன்று பணம் அது சரி. ஆனால் மாட்டின் நிழலில் தங்கியதற்குப் பணம் கேட்பது நியாயம் ஆகாது. அதற்குப் பணத்தின் நிழல் தான் கூலியாகும்.

ஆனால் இந்த இரவு நேரத்தில் பணத்தின் நிழல் கிடைக்காது. அதற்குப் பதில் பணத்தின் சப்தத்தைக் கூலியாகப் பெற்றுக் கொள்ள ஒப்புக் கொள்" என்று கூறிவிட்டு, "மாட்டுக்காரனை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

பணப்பையைத் தூக்கி வந்து, அவன் காதில் பணத்தின் ஒலி நன்றாகக் கேட்குமாறு மோதி மோதி அடியுங்கள். அப்போது கேட்கும் பணச் சப்தம்தான், மாட்டின் நிழலில் தங்கியதற்கு ஏற்ற கூலியாகும்." என்றான்.

உடனே அவ்வாறே செய்ய ஏற்பாடு ஆகியது. பணப்பையால் மாட்டுக்காரன் காது கிழியும்படி மோதி மோதி அடித்தார்கள். "ஐயா! போதும், போதும்! பணச் சப்தம் கேட்கிறது. எனக்குக் கூலி கிடைத்து விட்டது. என் காதே பிய்ந்து போகும் போலிருக்கிறது. இத்துடன் என்னை விட்டு விடுங்கள்" என்று கூவினான் மாட்டுக்காரன். அவர்கள் விடவில்லை. மாட்டுக்காரன் வலி பொறுக்காமல் கேவினான. "ஐயோ... உங்களுக்குப் புண்ணியமாகப் போகிறது. என்னை விட்டு விடுங்கள்" என்று கதறினான் மாட்டுக்காரன். அதற்குப் பிறகுதான் அவனை விட்டு விட்டார்கள்.

"ஐயா மாட்டுக்காரா! நீ கேட்டது கிடைத்து விட்டது. எங்களுக்கும் புத்தி வந்தது. உனக்கும் புத்தி வந்திருக்கும். இனி உன் மாடும் வேண்டாம் அதை நடத்திச் செல்ல நீயும் வேண்டாம். கொஞ்ச தூரம் தான் நாங்கள் போக வேண்டும். பொழுது விடிந்ததும் நாங்கள் புறப்பட்டு, மெல்ல மெல்ல நடந்து போய்க் கொள்கிறோம். இது வரை வந்ததற்கு உனக்குக் கோடி புண்ணியம்" என்று கையெடுத்துக் கும்பிட்டார் குரு தேவர்.

"ஐயா! என்னை விடுங்கள் உங்களுக்குக் கோடி புண்ணியம்" என்று மாட்டை ஓட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டான் மாட்டுக்காரன். "ஐயா! எங்கள் பிரச்சினைக்கு நல்ல முடிவு சொன்னீர்கள்" என்று அந்த ஊர்க்காரனுக்கு நன்றி செலுத்திப் பாராட்டினார் பரமார்த்த குரு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

– *கோன்பு தஸன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெல் அறுவடையின்போது விவசாயிகளைக் குழப்பும் கட்டணம்

தேர்தலை மையப்படுத்தாத ஓர் அரசியல் கட்சி எங்களிடம் இல்லாததன் பாதிப்பை இப்போது தமிழ் மக்கள் நன்குணர்ந்திருப்பர்.

தேர்தலை நோக்காகக் கொண்ட அரசியல் கட்சிகள் தங்களின் ஒவ்வொரு அசைவையும் தங்களுக்குச் சாதகமாகவே நகர்த்துவர்.

அந்தவகையில், இப்போது உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டதன் காரணமாக, நம் தமிழ் அரசியல் கட்சிகள் தேர்தல் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

கன்னை பிரிந்து தேர்தலில் நிற்கக்கூடிய தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுமாறு கேட்பது எந்தளவுக்குப் பொருத்தமற்றதென்பதை இனியேனும் நம் தமிழினம் உணர்ந்தாக வேண்டும்.

இதுஒருபுறமிருக்க, இன்றைய பொருளாதார நெருக்கடியால் மக்கள் மிகப்பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

அதிலும் குறிப்பிட்ட வர்த்தகர்கள் பொருளாதார நெருக்கடியைச் சாட்டாக வைத்து பொருட்களின் விலையைக் கண்டபாட்டில் உயர்த்தி விற்பனை செய்கின்றனர்.

இதுபோல பல இடங்களில் விலைக்கட்டணங்கள் ஏற்ற இறக்கத்துடன் அறவிடப்படுவதை அவதானிக்க முடியும்.

குறிப்பாக, தற்போது நெல் அறுவடைக் காலமாக இருப்பதால் நெல் வெட்டு இயந்திரங்களுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் ஊருக்கு ஊர், ஆளுக்கு ஆள் கடும் வித்தியாசப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இந்தநிலைமை, இனிமேல் வேளாண்மை செய்வதில்லை என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டிய கட்டாய சூழலை விவசாயிகளிடையே ஏற்படுத்தியுள்ளது.

உண்மை. தற்போது நெல் அறுவடை என்பது இயந்திரத்தின் மூலமாகவே நடைபெறுகிறது.

ஒரு பரப்பில் நெல் அறுவடை செய்வதற்கு இவ்வளவு கட்டணம் என்பதே நடைமுறை.

எனினும் இக்கட்டணத்தை கமத்தொழில் அமைப்புகள் எவையும் நிர்ணயம் செய்யாத நிலையில், நெல் வெட்டு இயந்திரத்தின் உரிமையாளர் மற்றும் அவர்களோடு சேர்ந்த தரகர்கள் கட்டணத்தைத் தீர்மானிக்கின்றனர்.

இதனால் அதிகூடிய கட்டணங்கள் சில இடங்களில் அறிவிடப்படுவதாக வேளாண் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே அறுவடைக்காலம் ஆரம்பித்துள்ளதால், நெல் வெட்டு இயந்திரத்துக்கான கட்டணத்தை கமத்தொழில் திணைக்களங்கள் நிர்ணயம் செய்து அவற்றைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

தவிர, உயர்ந்த கட்டணம் அறவிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் கமத்தொழில் அமைப்புகள் தயாராக வேண்டும்.

பாலுக்கும் பாணுக்கும் முட்டைக்கும் விலைகள் நிர்ணயம் செய்யப்படும்போது, – பயணத்துக்குக் கட்டணம் நிர்ணயிக்கப்படும்போது, நெல் வெட்டு இயந்திரத்துக்கான கட்டணத்தைத் தீர்மானிக்காமல் விடுவது எந்த வகையில் நியாயம் என்பதுதான் நம் கேள்வி.

ஆகையால் இதுதொடர்பில் சம்பந்தப்பட்டவர்களும் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களும் உடன் தலையிட்டு ஆவன செய்ய வேண்டும்.

# யாழ். மாநகர முதல்வர் நியமனம் எனது அதிகாரத்துக்கு உட்பட்டதல்ல

## வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா

யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற புதிய முதல்வர் தெரிவு எனது அதிகாரத்துக்கு உட்பட்ட விடயம் அல்ல என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ் மாநகர சபையின் புதிய முதல்வராக இமானுவேல் ஆனல்ட் நியமிக்கப்பட்டதாக வெளிவந்த வர்த்தமானி தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 19ஆம் திகதி யாழ். மாநகர முதல்வர் தெரிவு இடம்பெற இருந்த நிலையில் சபையில் கோரம் இருந்ததாக ஒரு பகுதியினரும் கோரம் இல்லை என பிறிதொரு பகுதியினரும் கருத்துத் தெரிவித்தமை தொடர்பில் ஊடகங்களில் அவதானித்தேன்.

மாநகர சபையில் புதிய முதல்வரை தேர்வு செய்யும் அதிகாரம் எனக்கு வழங்கப்படவில்லை மாறாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரையும் உள்ளூராட்சி ஆணையாளரை நியமிக்கும் அதிகாரங்களே என்னிடம் உள்ளது.

ஆகவே இலங்கை அரசியல் அமைப்பு மற்றும் மாநகர கட்டளைச் சட்டங்களுக்கு உட்பட்டு முதல்வர் தெரிவை மேற்கொள்ளும் அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்கே வழங்கப்பட்டுள்ளதுஎனஅவர்மேலும் தெரிவித்தார். (ம-7,33,104)

# இந்தியாவின் பாதுகாப்பில் இலங்கை கரிசனை – அலி சப்ரி

(கொழும்பு)

இந்தியாவின் பாதுகாப்புக்கு பிரச்சினை ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் இடம் தரப்படமாட்டாது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் பாதுகாப்பின் கரிசனையை இலங்கை புரிந்து கொண்டுள்ளது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனை தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இலங்கையின் அபிவிருத்திக்கு ஏனைய நாடுகள் உதவுவதை இந்தியா ஆட்சேபிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரின் அண்மைய பயணத்தின் போதும் கடந்த ஆகஸ்ட்டில் அவரை சந்தித்த போதும் இதனை ஜெய்சங்கர் வலியுறுத்தியதாக அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திக்காக ஏனைய நாடுகள் முதலீடுகளை மேற்கொள்வதும் நிதியுதவிகளை வழங்குவதை இந்தியா ஆட்சேபிக்காது என்று அவர் குறிப்பிட்டுள்ளதாக அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியா, ஜப்பான் போன்று சீனாவும் இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு உதவும் என்ற அலி சப்ரி நம்பிக்கை வெளியிட்டார். (ம-7)

# நாட்டை மீட்க மக்களும் அதிக பணியாற்ற வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்க, ஆட்சியாளர்களைப் போலவே, மக்களும் குறைந்த விடுமுறை எடுத்து, அதிக அளவில் பணியாற்ற வேண்டும் எனவும், கட்சியின் தலைவராக நடைமுறையில் அதற்கானபங்களிப்பை தாம் வழங்குவதாகவும், அது வார்த்தைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல், நிதர்சன ரீதியாக நடைமுறைப்படுத்துவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

குட்டித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியைப் பெறும் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் தாங்கள் நினைப்பது போல் நடந்து கொள்ள வாய்ப்பில்லை எனவும், சம்பிரதாய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் போல ஒப்பந்தம் செய்யவோ அல்லது பிற இலாபகரமான விடயங்களைச் செய்யவோ வாய்ப்பில்லை எனவும், மக்களுக்கு சேவை யாற்றும் ஸ்மார்ட் உள்ளூராட்சி சபையே தேவை எனவும் எதிர்க்கட்சித்தலைவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் நடவடிக்கைகள் இளைஞர் ஆலோசனைக் குழு மூலம் கண்காணிக்கப்படும் எனவும், மக்களுக்கு சேவை யாற்றாவிடின் அவர்களை உடனடியாக நீக்குவதற்கு இருமுறை சிந்திக்க மாட்டோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

இளைஞர்கள், பாடசாலை மாணவர்களின் அறிவை விருத்தி செய்ய, ஒவ்வொரு கிராமத்திலும் நூலகம் உருவாக்கப்பட்டு தகவல் மற்றும் தரவுகளை அணுக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும், இந்த அனைத்து வேலைத்திட்டங்களின் நோக்கமும் இலங்கையை உலகில் முதல் இடத்திற்கு ஸ்தானப்படுத்துவதே எனவும், இதற்காக பாராளுமன்றம் தனித்து செயற்பட முடியாது என்பதால் மக்களின் ஆதரவை பெற்றுக் கொள்ள பாடுபடுவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

# இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் உறுப்புரிமையை இரத்து செய்தது

## சர்வதேச கால்பந்து சம்மேளனம்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் உறுப்புரிமையை தற்காலிகமாக இரத்து செய்துள்ளது.

ஜனவரி 21ஆம் திகதி முதல் மறு அறிவிப்பு வரும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என பீபா அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற இலங்கை கால்பந்து சம்மேளன உத்தியோகபூர்வ தேர்தலில் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு புதிய அதிகாரிகள் சபை நியமிக்கப்பட்ட போதிலும், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் புதிய அதிகாரிகள் சபையை ஏற்றுக் கொள்ளாததால் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்த தேர்தலில் விளையாட்டுத் துறை அமைச்சர் மூன்றாம் தரப்பாக தலையிட்டமை, விளையாட்டு அமைச்சினால் வாக்குறுதியளிக்கப்பட்ட இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளாமை போன்ற காரணங்களினால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தடையின்படி, இலங்கை மற்றும் இலங்கை தேசிய அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த வீரரும், பயிற்றுவிப்பாளரும் அல்லது அதிகாரியும் சர்வதேச போட்டிகளிலோ அல்லது வேறு எந்த போட்டிகளிலோ பங்கேற்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# வாக்குச் சீட்டு தயாரிக்கும் பணிகள் நேற்று முதல் ஆரம்பம்

வாக்குச் சீட்டு தயாரிக்கும் பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுக்களை முறையாக கையளித்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் குறித்த தகவல்கள் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலேயே குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதற்கமைய 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தனித்தனியான வாக்குச் சீட்டுகள் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு திட்டமிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் அச்சடிக்க உடனடியாக அரச அச்சகத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச முயற்சிகளில் இமாலயமும் திபெத் பீடபூமியும் புறக்கணிக்கப்படுகின்றன

## ஐரோப்பிய ஆசிய பவுண்டேசன் தெரிவிப்பு

காலநிலை தொடர்பான சர்வதேச முயற்சிகளின் போது இமாலயம் மற்றும் திபெத் பீடபூமியில் நிகழும் மாற்றங்கள் குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை என சர்வதேச அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

காலநிலை மாற்றங்கள் தொடர்பான முயற்சிகளின் போது இந்த தொலைதூர பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன என ஐரோப்பிய ஆசிய பவுண்டேசன் அறிக்கை தெரிவிக்கின்றது.

அதிகம் புறக்கணிக்கப்பட்ட இந்த பகுதிகள் குறித்து உலக தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்தப் பிராந்தியத்தில் உலகின் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினர் வாழ்கின்ற போதிலும் இந்த பகுதி குறித்து கவனம் செலுத்தப்படுவது குறைவு.

ஆர்ட்டிக், அன்டார்ட்டிகா போன்ற பகுதிகளை போல இந்த பகுதிகள் குறித்து அதிக ஆய்வும் இடம்பெறவில்லை.

இதற்கு இப்பகுதியின் உயரம் கடுமையான தட்ப வெப்பநிலைகள் மற்றும் புவிசார் பிரச்சினைகள் காரணமாகயிருக்கலாம்.

இந்த பிராந்தியம் வேகமாக வெப்பமடைந்து வருகின்றது. கிட்டத்தட்ட சர்வதேச அளவை விட இரண்டு மடங்கு வேகத்தில் வெப்பமாகி வருகின்றது என பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அங்குள்ள பனிப்பாறைகள் கடந்த 50 ஆண்டுகளில் வேகமாக உருகிவிட்டன. திபெத் பீடபூமியின் 82 வீத பனிப்பாறைகளிற்கும் இதே நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் பிராந்தியத்தின் நிரந்தர உறைபனியின் பத்து வீதமும் அற்றுபோயுள்ளது என ஐரோப்பிய ஆசிய பவுண்டேசன் தெரிவித்துள்ளது.

மோசமான காலநிலையே இதற்கான காரணம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

# பெருவில் அரசுக்கு எதிரான போராட்டம் உலக அதிசயமான 'மச்சுபிச்சு'மூடப்பட்டது

(லிமா)

பெரு நாட்டில் நிலவும் தொடர் போராட்டம் காரணமாக உலக அதிசயமான மச்சு பிச்சு நகரம் மூடப்பட்டது.

மச்சு பிச்சு நகரில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் சிக்கியுள்ள னர்.

பெரு: தென் அமெரிக்க நாடான பெருவில் ஜனாதிப தியாக இருந்த பெட்ரோ காஸ் டில்லோ பாராளுமன்றத்தை கலைத்து அவசர நிலையை கொண்டு வர திட்டமிட்டார்.

இதையடுத்து அவரை எம்.பிக்கள் தீர்மானம் நிறைவேற்றி பதவி நீக்கம் செய்தனர். மேலும் கிளர்ச்சி மற்றும் சதித்திட்டம் தீட்டியதாகக் கூறி கைது செய்யப்பட்டார். புதிய ஜனாதிபதியாக பெண் தலைவர் டினா பொலுவார்டே பதவி ஏற்றார்.

இதையடுத்து பெட்ரோ காஸ்டிலோ ஆதரவாளர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இதில் பல இடங்களில் வன்முறை ஏற்பட்டது.

தலைநகர் லிமாவில் நடந்த பேரணியில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

அவசர நிலை பிறப்பிக்கப்பட்டாலும் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை.

இந்த நிலையில் பெருவில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான மச்சுபிச்சு நகரை அந் நாட்டு அரசு மூடியுள்ளது.

நாட்டில் நிலவும் தொடர் போராட்டம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 15 ஆம் நூற்றாண்டு இன்கா பேரரசால் மலை மீது கட்டப்பட்ட பழம் பெருமை வாய்ந்த நகரமான மச்சு பிச்சுவுக்கு ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள்.

தற்போது மச்சு பிச்சு நகரில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் சிக்கியுள்ளனர். தங்களை சொந்த நாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுற்றுலா அமைச்சருக்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

# உணவுப் பிரச்சினைக்கு ரஷ்யாவும் சீனாவுமே காரணம்

(வோஷிங்டன்)

உணவுப் பாதுகாப்பு பிரச்சினை அதிகரிக்க ரஷ்யாவும் சீனாவும் தான் காரணம் என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

ஆபிரிக்காவில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கும் இவ்விரு நாடுகளே காரணம் எனவும் அமெரிக்க கருவூல அமைச்சர் ஜேனட் யெல்லன் குற்றம் சுமத்தியுள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரால் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோல் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட நாடுகளை நெருக்கும் சீனாவின் கடன் கொள்கை குறித்தும் அவர் விமர்சனம் வெளியிட்டுள்ளார். (நி)

## மக்கள் தொகை அதிகரிப்பால் வெளிநாட்டுப் பறவைகளின் வருகையில் வீழ்ச்சி

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள பறவைகள் சரணாலயத்தில் மக்கள் தொகை பெருக்கம் மற்றும் ஒலி மாசு காரணமாக வெளிநாட்டுப் பறவைகளின் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்துள்ளன.

பிர்பூம் மாவட்டத்தில் உள்ள பல்லவ்பூர் வன விலங்கு சரணாலயத்தில் இடம் பெயர்ந்து வரும் பறவைகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு வெகுவாகக் குறைந்துள்ளது. வழக்கமாக ஆயிரக்கணக்கில் வரும் பறவைகளின் எண்ணிக்கை தற்போது சில நூறுகளாகச் சுருங்கி விட்டதால் பறவை ஆர்வலர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். (நி)

# தென்கொரியாவின் குடிசைப் பகுதியில் தீ விபத்து 60 வீடுகள் எரிந்து நாசம்



(சியோல்)

தென்கொரியாவின் தலைநகர் சியோலில் உள்ள குடிசைப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால், சுமார் 60 வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குர்யோங் கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை ஏற்பட்ட தீ விபத்தால் நூற்றுக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

எனினும், அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு அல்லது காயம் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

ஐந்து மணிநேர கடுமையான போராட்டத்திற்குப் பிறகு 900 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் மற்றும் பல ஹெலிகொப்டர்கள் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 350 | 320 | 300 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 350 | 350 |
| தக்காளி | 200 | 200 | 220 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 200 |
| கோவா | 80 | 100 | 100 | 120 |
| கரட் | 200 | 200 | 220 | 220 |
| பூசணி | 100 | 150 | 120 | 150 |
| புடோல் | 150 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 130 | 200 |
| சின்ன வெங்காயம் | 650 | 500 | 500-800 | 600 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 250 | 240 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 400 | 450 | 550 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 400 | 300 | 280 | 320 |
| கறிமிளகாய் | 700 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1400 | 1500 |
| போஞ்சி | 250 | 350 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | — | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 120 | 120 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 40-100 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 450 | 600 |
| முள்ளங்கி | 50 | 100 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 110 | 120 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | — | — | 200 |

# நியூஸிலாந்தின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ளார் ஹிப்கினிஸ்?

(வெலிங்டன்)

ஜசிந்தா ஆர்டெர்னுக்குப் பதிலாக தொழிலாளர் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கிறிஸ் ஹிப்கின்ஸ், நியூஸிலாந்து பிரதமராக பதவியேற்கவுள்ளார்.

அவர் பிரதமர் ஆவதற்கு முன்பு பிரதிநிதிகள் சபையில் தொழிலாளர் கட்சியால் முறையாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அவர் அந்த ஆதரவைப் பெற்றால், ஆர்டெர்ன் தனது இராஜினாமா கடிதத்தை ஆளுநர் ஜெனரலுக்கு முறையாக வழங்குவார். பின்னர் அவர் மூன்றாம் சார்லஸ் மன்னர் சார்பாக பிரதமராக நியமிக்கப்படுவார்.

நியூஸிலாந்தில் ஒக்டோபரில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் ஹிப்கின்ஸ் எவ்வளவு காலம் பதவியில் இருப்பார் என்பது நிச்சயமற்றதாக உள்ளது.

44 வயதான ஹிப்கின்ஸ், முதன்முதலில் 2008 இல் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் மற்றும் நவம்பர் 2020 இல் கொவிட்-19 அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஹிப்கின்ஸ், தற்போது பொலிஸ்துறை, கல்வி மற்றும் பொதுச் சேவை அமைச்சராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்தரப் பரீட்சை...

நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை இன்று திங்கட்கிழமை முதல் 2 ஆயிரத்து 200 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது.

3 இலட்சத்து 31 ஆயிரத்து 709 பாடசாலை மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

அத்துடன், பரீட்சை நிலையங்களின் பாதுகாப்பிற்காக விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஏழாலையில்...

ரின் சுற்றிவளைப்பில் குறித்த சந்தேக நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டார்.

மேலதிக விசா ரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## ஜி7 நாடுகள்...

உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுகிறது என்ற அடிப்படையிலேயே, ராஜபக்ஷ சகோதரர்கள் மற்றும் மற்றவர்கள் மீது கடுமையான தடைகளை விதிக்க முடிவு செய்தது

இதனையடுத்து இதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜி7 நாடுகளான பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ஐக்கிய ராச்சியம், மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளை வலியுறுத்துவதே தமது நோக்கம்.' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## சம்பந்தன்...

தேசிய கூட்டமைப்பின் புதிய தலைவர் நியமிக்கப்படுவார் என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வெற்றி, ஒற்றுமையை விரும்பும் மக்களின் வெற்றியென சுட்டிக்காட்டினார்.

அத்துடன், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு தற்போது தலைவராக இரா.சம்பந்தன் செயற்படவில்லையென்றும் தெரிவித்தார். (ம-7)

## சட்டவிதிமுறை...

விதிமுறையும் முதல்வர் தெரிவின் போது இருக்க வேண்டிய கோரம் இல்லாமையும்

இரு வேறு சந்தர்ப்பங்களில் பாதீடு தோற்கடிக்கப்பட்டு, இரண்டு முதல்வர்கள் பதவி இழக்கும் சந்தர்ப்பத்தில், உரிய சபை கலைக்கப்பட வேண்டும் என்பது விதிமுறையாக இருந்தபோதிலும் அந்தவிதிமுறை மீறப்பட்டுள்ளதாகவும் குறித்துரைத்து மேற்படி வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நடைமுறைப்...

தமிழ்த் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமாக இடம் பெறுவதாகவும் பிரச்சினைகளுக்கு தீர்வினை அளிக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீடித்துக்கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினைக் காண வேண்டும் என்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகுந்த கரிசனையுடன் இருக்கின்றார் எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், தற்போது 13 ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

குறித்த சட்டத்தினை அமுலாக்குவதில் உள்ள நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். (ம-7)

## மின் கட்டணத்தை...

அவர் மேலும் தெரிவிக்கையில், "சமீபத்தில் கட்டண திருத்தம் செய்யப்பட்ட பிறகும் இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் சுமார் 35 பில்லியன் ரூபாய் மாத்திரமே கிடைக்கின்றது.

ஜனவரி மாதத்தில் மட்டும் மின்சார விநியோகத்திற்கான நிலக்கரிக்கு 38.45 பில்லியன் ரூபாய் தேவை.

மின் உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியை ஏப்ரல் 25ஆம் திகதிக்கு முன்னதாகக் கொள்முதல் செய்ய வேண்டும், அதன் பிறகு செப்ரெம்பர் வரை நிலக்கரி ஏற்றுமதி செய்ய முடியாது.

மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், உயர்தரப் பரீட்சைகளின்போது தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு மேலதிகமாக 5 பில்லியன் ரூபாய் பெறுமதியான எரிபொருள் தேவைப்படுகின்றது என மின்சார சபைக்கு அறிவித்துள்ளதுடன் தற்போது அதனை வழங்க முடியாது.

கட்டண திருத்தம் என்பது அரசாங்கமோ அமைச்சரோ எடுக்கக்கூடிய கடினமான முடிவாகும். நாங்கள் தேர்தலைச் சந்திக்கும் நேரத்தில் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏன் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியும்" என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## தேர்...

குறிப்பிட்டுள் ளார்.

அத்துடன், தேர்தல் நட வடிக்கையில் அரசாங்கம் தலையிடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை பிற்போடும் நோக்கில் தேர்தல் செலவீனம் ஒழுங்குப் படுத்தல் சட்டம் இயற்றப்படவில்லை எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் ஊடாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் சூழ்ச்சி செய்வதாக அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்படுகிறது.

தேர்தலை பிற்போடும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## பரீட்சை நேரத்தில் மின் பாவனையை குறைக்குமாறு கோரிக்கை

க.பொ.த உயர்தர பரீட்சை இடம்பெறும் காலத்தில் மின்சார பாவனையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

பரீட்சை நேரங்கள் மற்றும் இரவு வேளைகளில் மின்சாரம் தடைப்படுவதால் பரீட்சார்த்திகள் அசௌகரியங்களுக்கும் சிரமங்களுக்கும் முகம் கொடுப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில்; உயர்தரப் பரீட்சையை வெற்றிகரமாக நடத்துவதற்கு மின்வெட்டுகளைத் தவிர்ப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பரிந்துரைகளை வழங்கியது.

எனினும், இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தத் முடியாதுள்ளதாக இலங்கை மின்சார சபை தமக்கு அறிவித்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1463
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 6 1 7 5 6 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.01.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1038
Y 05 07 53 73
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.22
சீட்டிழுப்பு இலக்கம் 3250
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
J 44 64 79 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1356
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
R 14 03 25 34 67

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.22
சீட்டிழுப்பு இலக்கம் 317
வெற்றி இலக்கங்கள்
துலாம் 05 12 31 33 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/22
சீட்டிழுப்பு இலக்கம் 5008
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
N 5 0 9 6 8 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1983 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.01.22 தினம் ஞாயிற்றுக்கிழமை
I 21 31 69 70
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 4,059,980/-
DLB www.dlb.lk

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.22
சீட்டிழுப்பு இல : 4144
வர்ணம் : இளஞ்சிவப்பு
ரூ. 3,390,540/-
வெற்றி இலக்கங்கள்
08 21 39 52 F
DLB

சசிரி
சீட்டிழுப்பு 278
சீட்டிழுப்பு திகதி 2023.01.22 ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
16 30 50
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 2,294,960/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,620,132/-
திகதி 2023-01-22
வெற்றி வாரம் 3695
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் மீனம்
24 35 39 50
4237
341
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,693,100/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 11 26 33 40 60
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1159
மஞ்சள்
திகதி 2023.01.22 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 300,127,124.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1809
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,699,720/-
வெற்றி இலக்கங்கள்
07 21 54 70 M
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14389)

076 825 7716 (ஆகாஸ்)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



# IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல.53, சிவகுருநாதர் வீதி,
**Brown Rd, Jaffna.**
**077 798 9830** By:- B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (14377)



# நெல்லியடியில் வாடகைக்கு

நெல்லியடி சந்தியில் இருந்து கொடிக்காமம் வீதியில் 50 மீற்றர் தூரத்தில் சகல வசதிகளுடன்கூடிய இடம். (காரியாலயம், REST HOUSE, முகவர் நிலையங்கள், சிறு தொழில்களுக்கு) வாகன தரிப்பிடத்துடன் கூடிய இடம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
**077 822 5333**
(C-5821)



# பதவி வெற்றிடம்

பருத்தித்துறையில் இயங்கிவரும் சூரிய மஹால் திருமண மண்டபத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## சமையல் உதவியாளர் (Kitchen Helper)

**அடிப்படை தகைமை**
- வயது எல்லை 35-50
- துறைசார் அறிவு
- முன்னனுபவம் விரும்பத்தக்கது

## உணவு பரிமாறுபவர் (Waiter)

**அடிப்படை தகைமை**
- வயது எல்லை 25-40
- துறைசார் அறிவு
- முன்னனுபவம் விரும்பத்தக்கது

## மண்டப சுத்திகரிப்பாளர் (Hall Cleaner)

**அடிப்படை தகைமை**
- வயது எல்லை 35-50

நேர்முகத்தேர்வு 28.01.2023 சனிக்கிழமை அன்று சூரியமஹால் திருமண மண்டபத்தில் (பிரதான வீதி, பருத்தித்துறை) பி.ப. 4.00 மணிக்கு இடம்பெறும்.

**076 704 6623, 077 881 1530, 077 704 6623**

shuriyamahal@gmail.com

(C-5829)



# பிரதேச வைத்தியசாலை அளவெட்டி நோயாளர் நலன்புரிச் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம்

இடம் : வைத்தியசாலை மண்டபம்
காலம் : 09.02.2023 வியாழக்கிழமை
தலைமை: திரு.வை.சுப்பிரமணியம் அவர்கள்
நேரம் : பிற்பகல் 4.30 மணி (14370)

புதிய நிர்வாக தெரிவு இடம் பெறும் அனைத்து ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- செயலாளர்



# அகரம் உயர் நிலைக் கல்லூரி
# AHARAM HIGH STANDARD COLLEGE

மல்லாகம் | கொக்குவில்

தரம் - 06

தமிழ் / ஆங்கில மொழிமூல மாணவர்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

(14363) நிர்வாகி


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு 13 • 04 • 1933

இறப்பு 25 • 12 • 2022

கடந்த 25.12.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

## அமரர். இரத்தினம் பாக்கியம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று 22.01.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று 23.01.2023 திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்னாரின் மரணச் செய்தி கேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், பனர்கள் அச்சிட்டு வெளியிட்டவர்களுக்கும், நேரிலும், தொலைபேசி, இணையம் மூலம் ஆறுதல் செய்தி கூறியவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எம் உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

(C-5832)

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**
- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை **675,000** ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

(14375)



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 42 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணறுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

**077 986 5457, 077 814 7389**

(14375)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org